# DINAMALAR – 2.1.2010

# தென்மண்டல கால்பந்து: கேரளா பல்கலை சாம்பியன்

கோவை, ஜன.2-

தென்மண்டல கால் பந்து போட்டியில், திருவனந்தபுரம் கேரளா பல்கலை அணி சாம்பியன் பட்டம் வென்று, அகில இந்திய பல்கலை., கால் பந்து போட்டிக்கு தகுதி பெற்றது. கண்ணனூார், சென்னை இந்துஸ்தான், கோவை பாரதியார் பல்கலை அணிகளும் அகில இந்திய பல்கலை., போட்டிக்கு விளையாட தகுதி பெற்றன.

பாரதியார் பல்கலை உடற்கல்வித்துறை சார்பில் நடந்த தென் மண்டல பல்கலை இடையிலான கால்பந்து போட்டியில் கேரளா, தமிழகம், கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களை சேர்ந்த 53 பல்கலை., அணிகள் 'நாக் அவுட்-லீக்' முறையில் மோதின.

தென்மண்டல பைனல் லீக் போட்டியில், கேரளா பல்கலை இரண்டு வெற்றி, ஒரு 'டிரா'என ஏழு புள்ளிகளுடன் முதலிடமும், கண்ணனூார் ஒரு வெற்றி, இரண்டு 'டிரா' என ஐந்து புள்ளிகளுடன் இரண்டாவது இடமும், சென்னை இந்துஸ்தான் பல்கலை ஒரு வெற்றி, ஒரு 'டிரா', ஒரு தோல்வி என நான்கு புள்ளியுடன் மூன்றாவது இடமும் பெற்றன. பாரதியார் பல்கலை மூன்று தோல்வியுடன் நான்காவது இடத்தை பெற்றன.

இதையடுத்து அகில இந்திய பல்கலை., போட்டிக்கு தென்மண்டலத்தின் சார்பில் கேரளா, கண்ணனூார், சென்னை இந்துஸ்தான், பாரதியார் பல்கலை அணிகளும், கிழக்கு(மிசோரம், கோல் கட்டா, பர்த்வான், கல்யாணி), மேற்கு (கோவா, மும்பை, பரகத்துல்லா, கோடா), வடக்கு மண்டல பல்கலை (பாட்டியாலா, குருநானக் தேவ், பஞ்சாப், லக்னோ) சேர்த்து மொத்தம் 16 அணிகள் தேர்வாகியுள்ளன.

தென்மண்டல போட்டி முடிந்த நிலையில், பாரதியார் பல்கலை யில் அகில இந்திய பல்கலை., கால்பந்து போட்டி இன்று துவங்கி, வரும் 8ம் தேதி வரை நடக்க உள்ளது.